**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் – துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்படாத 28 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி / கல்லூரி விடுதிகளில் தலா ஒரு துப்புரவுப்பணியாளர் வீதம் 28 பகுதி நேர துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணைகள் –வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை**

அரசாணை (நிலை) எண்.60

நாள் 27. 10. 2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி, ஐப்பசி 10

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.28, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 16.03.2012.
2. அரசாணை (நிலை) எண்.83, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 26.06.2012.
3. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.பி1/4823/2017, நாள் 21.07.2017.

-------

**ஆணை:**

தமிழ்நாட்டில் 1338 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் தங்கிப்பயிலும் மாணவ / மாணவியரின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு அவை துவங்கப்படும்போது ஒவ்வொரு விடுதிக்கும் தேவைக்கேற்ப பகுதிநேர / முழுநேர துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்படுகின்றன.

2. எனினும், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 28 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் தோற்றுவிக்கப்பட்டபோது துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்படவில்லை. அதனையடுத்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 1236 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியரின் எண்ணிக்கைக்கேற்ப 66 சிறப்புக் காலமுறை ஊதிய துப்புரவாளர் பணியிடங்களும், 1170 பகுதி நேர தொகுப்பூதிய துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டபோதும், முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட 28 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்குரிய துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்படாமல் விடுபட்டுவிட்டன.

3. அதனையடுத்து 2017–18–ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பில் 13.07.2017 அன்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

**"பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விடுதிகளுள் துப்புரவு பணியாளர் பணியிடங்கள் இல்லாத 28 விடுதிகளில், புதிதாக 28 பகுதி நேர துப்புரவு பணியாளர் பணியிடங்கள் மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியத்தில் ஏற்படுத்தப்படும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 10 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்."**

4. அதனைச் செயற்படுத்தும் விதமாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதத்தில் பெறப்பட்ட கருத்துருவில் தற்போது இயங்கிவரும் 1338 விடுதிகளில், மேற்படி விடுபட்ட 28 விடுதிகளுக்கு மட்டும் தலா ஒரு பணியிடம் வீதம் புதிதாக 28 பகுதிநேரத் துப்புரவாளர் பணியிடங்களை மாதமொன்றுக்கு ரூ.3,000/– தொகுப்பூதியத்தில் ஏற்படுத்தவும், ஆண்டொன்றுக்கான கூடுதல் செலவினமான ரூ.10,08,000/–க்கு ஒப்பளிப்பு வழங்கிடுமாறும் கோரி, உரிய விடுதிகளின் பட்டியலையும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் இணைத்தனுப்பியிருந்தார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து துப்புரவுப்பணியாளர் பணியிடங்கள் இல்லாத மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் துவங்கப்பட்ட 28 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி / கல்லூரி விடுதிகளுக்கு புதிதாக 28 பகுதிநேர துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கவும், அப்பணியிடங்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.3000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) வீதம் ஒப்பளித்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேற்குறிப்பிட்ட பணியிடங்களை தோற்றுவிப்பதால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.10,08,000/–(ரூபாய் பத்து இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) செலவினம் ஏற்படும். இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்.

i) <u>பிற்படுத்தப்பட்டோர் நலன்: ரூ.3,24,000/–</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம் (த.தொ.கு. 2225 03 277 AA 3344)"

ii) <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்:ரூ.5,76,000/–</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள்–BC மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம் (த.தொ.கு. 2225 03 277 BC 3349)"

iii) <u>சிறுபான்மையினர் நலன்: ரூ.1,08,000/–</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04 சிறுபான்மையினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – JB சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்.(த.தொ.கு. 2225 04 277 JB - 3342)"

7. மேலே பத்தி 6–ல் கணக்கு தலைப்பு வரிசை எண்.1–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரும், கணக்குத் தலைப்பு வரிசை எண்.2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரும் மற்றும் கணக்கு தலைப்பு வரிசை எண்.3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை சிறுபான்மையினர் நல இயக்குநரும் பெற்று வழங்கவும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2017–18–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடுசெய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 5–ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 5–ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான, உரிய கருத்துருவை 2017–18–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (பி.,மி.பி.(ம)சி.ந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.51686/ பி,மிபி.(ம)சி.ந./17, நாள் 27.10.2017–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்:-1734(ஆயிரத்து எழுநூற்று முப்பத்து நான்கு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஆ.கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5.
ஆணையர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5.
இயக்குநர், சிறுபான்மையினர் நலம், சென்னை–2.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு),சென்னை –01.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
மாநில கணக்காயர், சென்னை–18/35.

நகல்
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (பி, மி.பி.(ம) சி.ந./வ.செ.பொ–II) துறை, சென்னை–9.
அரசு செயலாளர் (பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை) அவர்களின் முதுநிலை தனிச்செயலாளர், சென்னை–9.
அரசு கூடுதல் செயலாளர் (பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை) அவர்களின் நேர்முக எழுத்தர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/10

பிரிவு அலுவலர்

27/10